

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி வழியாக செல்லும் பாலாற்றில் மழை வெள்ளம் செல்வதால் ஆற்றின் குறுக்கே பொய்கை மோட்டூர் பகுதியில் கட்டப்பட்டு வரும் புதிய தடுப்பணையை மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு மற்றும் திட்டக் குழு தலைவர் மு.பாபு மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள் பி. வெங்கடேசன், கோ.குமாரபாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட குண்டுஉப்பலவாடி, தாழங்குடா, கண்டக்காடு ஆகிய பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் குறித்து டிராக்டர் வாகனத்தில் நேற்று (02.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா உட்பட பலர் உள்ளனர்.

# வேலூர் மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர், டிச. 3-

வேலூர் மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமதுசகி தலைமையில் இன்று (03.12.2024 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 07.12.2024 அன்று வேலூர் மாவட்டம் வருகை

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் நகரில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, இலவச கண் சிகிச்சை முகாமை மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கி வைத்தனர். எஸ்.ராஜேந்திரன், சு.அரசு, டி.கே.மோகன், சங்கீதா, வெங்கடேசு, தே.பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கவிஞர் முடியரசன்**
**டிசம்பர் 3 (1998)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.

கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.

“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.

தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பா.ஜ.க. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்

# எச்.ராஜாவுக்கு 6 மாதம் சிறை தண்டனை!

## தந்தை பெரியார் சிலை உடைப்பு – கனிமொழி கருணாநிதி மீது விமர்சன வழக்கில் தீர்ப்பு!

சென்னை, டிச. 3 –

தந்தை பெரியார் சிலை உடைப்பு கருத்து, தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி மீது விமர்சனம் செய்ததாக தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஹெச். ராஜா குற்றவாளி என தீர்ப்பளித்த சென்னை சிறப்பு நீதிமன்றம் இரண்டு வழக்கிலும் தனித்தனியாக 6 மாதம் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஹெச்.ராஜா கடந்த 2018 ம் ஆண்டு மார்ச் மாதம் பெரியார் சிலையை உடைப்பேன் என்று ட்விட்டரில் பதிவு செய்தது தொடர்பாகவும், 2018 ஏப்ரல் மாதம் தி.மு.க. எம்.பி. கனிமொழிக்கு எதிராக ட்விட்டர் தரக்குறைவாக கருத்து கூறியதாகவும் பல்வேறு காவல் நிலையங்களில் தி.மு.க நிர்வாகிகள், தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் புகார்கள் அளிக்கப்பட்டது.

கனிமொழி கருணாநிதி எம்.பி. மீது விமர்சனம் செய்த புகார் தொடர்பாக ஈரோடு நகரக் காவல்துறையும் பெரியார் சிலை உடைப்பு தொடர்பாக ஈரோடு மாவட்ட கருங்கல் பாளையம் காவல்துறையும் ஹெச். ராஜாவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கை ரத்து செய்ய கோரி ஹெச். ராஜா தாக்கல் செய்த வழக்கை கடந்த முறை தள்ளுபடி செய்த சென்னை உயர்நீதிமன்றம் மூன்று மாதங்களில் இரண்டு வழக்கின் விசாரணையை முடிக்க சென்னை எம்.பி, எம்.எல்.ஏ மீதான குற்ற வழக்குளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து வழக்கு விசாரணை சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜி.ஜெயவேல் முன் நடைபெற்றது.

வாதங்களுக்கு பிறகு வழக்கின் தீர்ப்பை கடந்த மாதம் 14 ம் தேதி தள்ளிவைத்த நீதிபதி ஜெயவேல், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்தார், அதில் 41 பக்க தீர்ப்பில் எச்.ராஜாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் காவல்துறை தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே அவரை குற்றவாளி என தீர்மானிப்பதாகவும். இரு பதிவுகளும் ராஜா அவர்களின் சமூக வலைதள பக்கத்தில் இருந்து அனுப்பப்பட்டது என்பதை இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறு ஹெச். ராஜா அனுப்பவில்லை என்பதற்கு எந்த ஆதாரங்களும் குற்றவாளி தரப்பில் இருந்து தாக்கல் செய்யவில்லை. எனவே ராஜா குற்றவாளி என தீர்ப்பளித்தார்.

மேலும் இரண்டு வழக்கில் தனித்தனியாக 6 மாதம் சிறை தண்டனை 10 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

## மீட்பு – நிவாரணப் பணிகள் தீவிரம்!

# புயலுக்கு முன்னரே அமைதி காண விழையும் அரசு!

## தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச. 3 -

ஃபெஞ்சல் புயலால் கடும் மழை இருந்த போதும் மீட்பு - நிவாரணப் பணிகளை அரசு முடுக்கி விட்டது. புயலுக்கு முன்னரே அமைதி காண விழையும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 2.11.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடகிழக்கு பருவமழைக் காலம் என்றாலே, தமிழக மக்களுக்கு ஒருவித கிலி கடந்த 10 ஆண்டு காலத்தில் ஏற்பட்டு விட்டது. இக்காலத்தில் உருவாகும் புயலும், மழை வெள்ளமும் சில சமயங்களில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடுவதுண்டு. அதிலும் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தானே மற்றும் வர்தா புயல்கள் சென்னை மக்களை சிதறடித்தது. கடந்த 2015 மற்றும் 2016ம் ஆண்டு புயலின்போது சுமார் 20 மணி நேரம் மழை கொட்டித் தீர்த்ததால், சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பலத்த சேதத்திற்கு உள்ளாயின. நூற்று க்கணக்கான மரங்கள் முறிந்து விழுந்ததோடு, இயல்பு வாழ்க்கை திரும்பவே ஒரு மாதம் ஆனது. அலட்சியத்திற்கு பேர் போன அ.தி.மு.க. அரசும், புயல் காலங்களில் வேடிக்கை பார்த்து விட்டு, பின்னர் நிவாரணம் பெயரில் பல உருட்டல்களை நடத்தியது. கஜா புயலிலும் இதே கதைதான்.

கடந்தாண்டும் புயல், வெள்ளத்தில் சென்னை மட்டுமின்றி, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் பெரிய பாதிப்புக்குள்ளாயின. ஆனால் அரசும், அரசு இயந்திரங்களும் செயல்பட்ட விதம், நடப்பது திராவிட மாடல் ஆட்சி என்பதை மக்களுக்கு அடிக்கடி நினைவூட்டின. வெள்ளம் புகுந்த இடங்களில் உடனடியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டதோடு, துரித கதியில் மீட்பு பணிகளும் நடந்தேறின. இவ்வாண்டும் வடகிழக்கு பருவமழை காலத்தில் தற்போது உருவான ஃபெஞ்சல் புயல் மாமல்லபுரத்தில் இருந்து 50 கி.மீ. தொலைவில் நகர்ந்து புதுச்சேரி அருகே கரையை கடந்தது. இப்புயல் உருவான நாளில் இருந்தே சென்னையும், புதுவையும் அதோ கதிதான், தமிழகமே தத்தளிக்க போகிறது என்கிற மாதிரியான அச்சுறுத்தல்கள் சமூக வலை தளங்களில் பரவின. அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் அதற்கு தூபமிட்டன. ஆனால் மக்கள் நலன் நாடும் திராவிட மாடல் அரசு புயலையும், வெள்ளத்தையும் எதிர்கொள்ள



தினகரன்

புயலுக்கு முன் அமைதி

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முன்பே எடுத்திருந்தது.

சென்னையின் பல்வேறு இடங்களில் அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக மழைநீர் தேங்காமல், தண்ணீர் வெளியேறிய வண்ணமே இருந்தது. சென்னைக்கு வெள்ளப்பாதிப்பும் குறைவாகவே இருந்தது. மழை வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான விழுப்புரம் மாவட்டத்திற்கு மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர்களை உடனடியாக அனுப்பி வைத்தார் முதல்வர். தொடர்ந்து துணை முதல்வரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். வெள்ள பாதிப்புகளை தடுக்க தயார் நிலையில் இருந்த மூத்த அதிகாரிகள் குழுவும் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு உடனடியாக விரைந்தது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஒன்றிய வானிலை அறிக்கைகள் சரிவர இருப்பதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சென்னையில் உள்ள தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள் கணித்த அளவுக்கு கூட, ஒன்றிய அரசின் பெஞ்சல் புயல் கணிப்புகள் சரிவர இல்லை. எத்தனையோ புயல், வெள்ளத்தை எதிர்கொண்டுள்ள சென்னை மாநகரம், இம்முறை பெஞ்சல் புயலை அசால்டாக எதிர்கொண்டது என்பதே உண்மை. இதைக்காண பொறுக்காமல் அ.தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சியினர், சென்னையின் பழைய வெள்ள காட்சிகளை பதிவிட்டு, தங்களுக்கு தாங்களே ஆறுதல் தேடிக் கொண்டனர். கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மீட்பு நடவடிக்கைகளிலும், அதை தொடர்ந்து நிவாரண பணிகளையும் இப்போதே அரசு முடுக்கி விட்டுள்ளது. பொதுவாக புயலுக்கு பின்னே அமைதி என்பார்கள். ஆனால் இப்போது புயலுக்கு முன்னரே அமைதியை காண விழைகிறது திராவிட மாடல் அரசு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது..



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், வேட்டபட்டு அரசு பள்ளி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை துறை சார்பில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், இல்லம் தேடி மருத்துவப் பெட்டகம் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் கே.சதிஷ்குமார், சத்யாசதீஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் சாந்தன், மருத்துவர்கள் வினோத்குமார், சதீஷ்குமார், மீனாட்சிதேவி, புகழேந்தி ஊராட்சிமன்ற தலைவர் அனுமந்தன், புகழேந்தி, நந்தகுமார், ரவி, ஜெயபால், ஆனந்தன், பாப்பன்னன், கிருஷ்ணமூர்த்தி, பிரகாசம், கிருஷ்ணன், மணி, கண்ணன், பட்டேல், ராஜேந்திரன், ஸ்ரீதர் மற்றும் மருத்துவ குழுவினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# விராலிமலை சட்டமன்றத் தொகுதி வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, டிச. 3 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞ ரணி சார்பில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப் பாண் டியன் தலைமையில் எம்.கே.எஸ் திருமண மண்டபம் மேட்டுச்சாலை இலுப்பூரில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம் வரவேற்புரையில், கழக இளைஞரணி துணைச் செயலாளர் இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா நூ.அன்சாரி பாஷீத் ஆகியோரது முன்னிலையில், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சகோதரர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஊடகவியலாளர் வர வானை செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டு பாகநிலை இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பெடுத்தார்கள். நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், விவசாய தொழிலாளர் துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் மு.பி.ம. சத்தியசீலன், ஒ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பழனியப்பன், எம்.செந்தில்குமார், இருப்பூர் பேரூர் கழக செயலாளர் வை.விஜயகுமார், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கை.பழ னிச்சாமி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், கிளை, பாக இளைஞர் அணி பொறுப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் அரசு தலைமை மருத்துவமனையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரத்ததான நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம். சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமலு விஜயன்கலந்து கொண்டு ரத்ததான முகாமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் கள்ளூர் கே ரவி, அவைத்தலைவர் முரளி பொதுக் குழு உறுப்பினர் சக்திதாசன் , துணை செயலாளர்கள் பத்மநாதன், அருணாச்சலம், பொருளாளர் லிங்கம் மாவட்ட பிரதிநிதி சதாசிவம், பாபு, தொண்டரணி அமைப்பாளர் பைரோஸ், மற்றும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மாணவர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.